S. பிச்சையா ஆச்சாரி சன்ஸ்-ன்
ஸ்ரீ முருகன் ஜீவல்லரி மார்ட் A/C
HALL MARK
தங்கம் ★ வெள்ளி ★ வைரம்
9443081168 8438442557 9994638971
நகை சேமிப்பிற்கு செய்கூலி, சேதாரம் கிடையாது.
Sri Murugan Jewellery Mart
உரிமையாளர்கள்
P. மணிகண்டன் B.Com., 78452 54592
P. பட்டு சங்கர் B.E., 99946 38971
41, மெயின் ரோடு, சங்கரன்கோவில்.
98945 71069


# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"


SPARES
2 WHEELER
SDK spare parts
HERO HONDA, TVS, BAJAJ, ROYAL ENFIELD, KTM, YAMAHA
ஒரிஜினல் ஸ்பேர்ஸ் கிடைக்கும்
No.3, மாஸ்டர் வீவர்ஸ் அசோசியேஷன் காம்ப்ளக்ஸ், சங்கரன்கோவில்
7540002331 / 9865147105

Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 335 | 28.05.2026 | THURSDAY | VAIKASI : 14 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 335 | 28.05.2026 | வியாழக்கிழமை | வைகாசி : 14 | விலை : ரூ.5/–

## தமிழ்த்தாய் வாழ்த்து முதல் மேகேதாட்டு வரை:

# "மோடியிடம் விஜய் முன்வைத்த கோரிக்கைகள் என்னென்ன?"



புதுடெல்லி: மே.28-

தமிழக அரசு நிகழ்வுகளில் தமிழ்த்தாய் வாழ்த்து முதலில் பாடப்பட வேண்டும், காவிரியின் குறுக்கே கர்நாடகா மேகேதாட்டு அணை கட்ட அனுமதி அளிக்கக் கூடாது, இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களையும், அவர்களின் படகுகளையும் விடுவிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு முக்கிய கோரிக்கைகளை பிரதமர் மோடியிடம் முதல்வர் விஜய் முன்வைத்துள்ளார்.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: பிரதமர் நரேந்திர மோடியை, முதல்வர் விஜய் புதுடெல்லியிலுள்ள பிரதமரின் அலுவலகத்தில் நேற்று (மே 27) மரியாதை நிமித்தமாக சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்பின் போது, பிரதமர் மோடி தனது நெதர்லாந்து நாட்டுப் பயணத்தின்போது, ஆனைமங்கலச் செப்பேடுகளை மீட்டு இந்தியாவுக்குக் கொண்டு வந்ததற்காக நன்றி தெரிவித்தார்.

மேலும், மாநில வாழ்த்துப் பாடலான தமிழ்த்தாய் வாழ்த்து, தமிழ்நாட்டில் நடைபெறும் அனைத்து அரசு நிகழ்ச்சிகளின் தொடக்கத்திலேயே எப்போதும் பாடப்பட்டு வருகிறது என்றும், உள்துறை அமைச்சகத்தால் இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் வெளியிடப்பட்ட குறிப்பாணையைத் தொடர்ந்து, சில குறிப்பிட்ட அரசு நிகழ்ச்சிகளில், தேசியப் பாடல் முதலாவதாகப் பாடப்பட்டு வருகிறது என்றும், இந்நிலையில், அரசு நிகழ்ச்சிகளின் தொடக்கத்தில் மாநில வாழ்த்துப் பாடலைப் பாடுவதற்கு உள்துறை அமைச்சகத்தால் உரிய தெளிவுரையினை வழங்குமாறு முதல்வர் விஜய் கேட்டுக்கொண்டார்.

மேம்பட்ட நடுத்தர போர் விமான வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டு மையம் மற்றும் வான்வழி அமைப்பு மையம் ஆகியவற்றை தமிழ்நாட்டில் அமைப்பது குறித்து கடந்த சில ஆண்டுகளாக பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்துடன் ஆலோசனைகள் நடத்தப்பட்டு வருகின்ற நிலையில், வான்வழி அமைப்பு மையத்தினை தமிழ்நாட்டில் அமைக்குமாறு முதல்வர் விஜய் கேட்டுக்கொண்டார்.

காவிரி ஆற்றின் குறுக்கே மேகேதாட்டு அணைத் திட்டத்துக்கான பூமி பூஜையை நடத்தவுள்ளதாக கர்நாடக துணை முதல்வர் அறிவித்திருப்பது காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்புக்கும், உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புக்கும் முற்றிலும் முரணானது என்றும், இந்த அறிவிப்பு தமிழ்நாட்டு விவசாயிகளிடையே பெருங்கவலையை ஏற்படுத்தியுள்ளது என்றும், தமிழ்நாடு, கேரளா மற்றும் புதுச்சேரி ஆகிய இணை ஆற்றுப்படுகை மாநிலங்களின் ஒப்புதல் இல்லாமல் மேற்காணும் திட்டத்தினை அனுமதிக்கக் கூடாது என ஜல் சக்தி அமைச்சகத்துக்கும், மத்திய நீர்வள ஆணையத்துக்கும் பிரதமர் அறிவுறுத்துமாறு முதல்வர் கேட்டுக்கொண்டார்.

மேலும், தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படுவதும், துன்புறுத்தப்படுவதும் மிகக் கவலைக்கிடமான அளவிற்கு அதிகரித்துள்ளது என்றும், 2026ஆம் ஆண்டில் மட்டும் 12 கைது சம்பவங்கள் நடைபெற்றுள்ளன என்றும், தற்போது 58 மீனவர்கள் இலங்கையில் காவலில் உள்ளனர் என்றும், 266 படகுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவித்து, மீனவர்களையும் அவர்களது படகுகளையும் உடனடியாக விடுவிக்க இலங்கை அரசை, இந்திய அரசு வலியுறுத்த வேண்டும் என்று பிரதமர் மோடியை முதல்வர் விஜய் கேட்டுக் கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



## "அதிமுகவினர் மனுக்களை பரிசீலித்து இன்று முடிவை அறிவிக்கிறேன்"

### சபாநாயகர் ஜேசிடி பிரபாகர்

சென்னை: மே.28-

அதிமுக எம்எல்ஏக்கள் அளித்த மனுக்கள் தொடர்பான முறையான அறிவிப்பை இன்று காலை வெளியிடப் போவதாக சபாநாயகர் ஜேசிடி பிரபாகர் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவைத் தேர்தல் முடிவை அடுத்து அதிமுகவில் எடப்பாடி பழனிசாமி தலைமையில் ஒரு அணி, சி.வி. சண்முகம் எஸ்.பி. வேலுமணி தலைமையில் ஒரு அணி என இரண்டு அணிகளாக உருவாகின. சி.வி. சண்முகம் எஸ்.பி. வேலுமணி தலைமையில் ஒரு அணி, நம்பிக்கை வாக்கெடுப்பில் விஜய் தலைமையிலான அரசுக்கு ஆதரவாக வாக்களித்தது.


இதையடுத்து, சி.வி. சண்முகம் எஸ்.பி. வேலுமணி தலைமையில் ஒரு அணியினர் மீது கட்சித் தாவல் தடைச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எடப்பாடி பழனிசாமி தரப்பில் சபாநாயகரிடம் மனு அளிக்கப்பட்டது. இதேபோல், சட்டமன்ற கொறடா, சட்டமன்றக் குழு தலைவர் தொடர்பாக சி.வி.சண்முகம் எஸ்.பி. வேலுமணி அணி சபாநாயகரிடம் மனு ஒன்றை அளித்தது.

இந்நிலையில், இரு அணிகளும் இன்று ஒன்றுசேர்ந்துள்ளன. இதையடுத்து, இரு தரப்பும் சபாநாயகரைச் சந்தித்து ஏற்கனவே தாங்கள் அளித்த மனுக்களை வாபஸ் பெறுவதாக அறிவித்தனர்.

இதையடுத்து, சபாநாயகர் ஜேசிடி பிரபாகர் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர், "அதிமுக சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டப்பேரவை உறுப்பினர்கள் ஏற்கனவே இரு வேறு குழுக்களாக பிரிந்து மனுக்களை அளித்திருந்தார்கள். நேற்று முன்தினம் 5 பேர் சேர்ந்து ஒரு மனு கொடுத்தார்கள். பிறகு, ஒருவர் ஒரு மனு கொடுத்தார். இன்றைக்கு, ஏற்கனவே அளிக்கப்பட்டவர்கள் சார்பில் மனு அளிக்கப்பட்டுள்ளது. அவற்றை படித்து ஆய்வு செய்து முறையான அறிவிப்பை இன்று காலை வெளியிடுவேன்" என தெரிவித்தார்.

அதிமுகவில் பிரிந்தவர்கள் தற்போது இணைந்துள்ளார்களே என்ற செய்தியாளர்களின் கேள்விக்கு, "இது குறித்து நீங்கள் அவர்களிடம்தான் கேட்க வேண்டும். எனக்கு அவர்கள் மனு கொடுத்திருக்கிறார்கள். அடுத்து அவர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்பதை நீங்கள் அவர்களிடம்தான் கேட்க வேண்டும்" என தெரிவித்தார்.

## 20 கோடி முட்டைகளை சேமித்து வைத்து பள்ளிகளுக்கு வழங்குவதா? அண்ணாமலை கண்டனம்



சென்னை: மே.28-

"கடந்த மார்ச் மாதம் விலை குறைந்த போது, ஒப்பந்ததாரர்கள் சுமார் 20 கோடி முட்டைகளை வாங்கி குளிர்சாதன கிடங்குகளில் சேமித்து வைத்திருக்கிறார்கள். இந்த முட்டைகளை ஆண்டு முழுவதும், பள்ளி மாணவர்களுக்கு வழங்கத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது" என தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை குற்றம்சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'தமிழகப் பள்ளி மாணவர்களின் மதிய உணவுத் திட்டத்தில் வழங்கப்படும் முட்டைகளுக்கு, ஆண்டு முழுவதும் ஒரு முட்டைக்கு ரூ.5.63 என்ற நிலையான விலையை தமிழக அரசு வழங்குகிறது. இந்த நிலையில், கடந்த மார்ச் மாதம் ஒரு முட்டை ரூ.3.70 என்று விலை குறைந்த போது, ஒப்பந்ததாரர்கள் சுமார் 20 கோடி முட்டைகளை வாங்கி குளிர்சாதன கிடங்குகளில் சேமித்து வைத்திருக்கிறார்கள் என செய்திகள் வெளியாகியுள்ளன.

அதாவது, குறைந்த விலைக்கு பெருமளவில் சேமித்து வைத்து, ஆண்டு முழுவதும், பள்ளி மாணவர்களுக்கு வழங்கத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது. முட்டை என்பது நீண்ட காலம் கெட்டுப் போகாமல் இருக்கும் பொருள் அல்ல. குளிர்சாதனக் கிடங்கில் மாதக்கணக்கில் வைத்திருந்து, பின்னர் தொலைதூர கிராமப்புற பள்ளிகளுக்கு கொண்டு செல்லப்படும் போது அதன் தரம், ஊட்டச்சத்து மற்றும் உணவு பாதுகாப்பு நிச்சயம் பாதிப்புக்குள்ளாகும்.

கடந்த திமுக ஆட்சியில், பள்ளி மாணவர்களுக்கு மதிய உணவுக்கு பல முறை அழுகிய முட்டை வழங்கப்பட்டதைக் கடுமையாகக் கண்டித்திருந்தோம். தவெக ஆட்சியிலும், அதே நிலை தொடராமல் இருக்க வேண்டும். இது வெறும் கொள்முதல் சார்ந்த பிரச்சினை அல்ல. லட்சக்கணக்கான பள்ளிக் குழந்தைகளின் ஆரோக்கியம் மற்றும் பெற்றோரின் நம்பிக்கை சார்ந்ததாகும்.

## ஈகைத் திருநாள்: முதல்வர் விஜய், அரசியல் கட்சித் தலைவர்கள் வாழ்த்து



சென்னை: மே.28-

முதல்வர் விஜய், திமுக தலைவர் மு.க.ஸ்டாலின், அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி ஆகியோர் பக்ரீத் பண்டிகை வாழ்த்துகளைப் பகிர்ந்துள்ளனர்.

முதல்வர் விஜய் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில்: "ஈகைத் திருநாளாம் பக்ரீத் திருநாளை முன்னிட்டு, இஸ்லாமிய சகோதர, சகோதரிகள் அனைவருக்கும் எனது இதயம் கனிந்த நல்வாழ்த்துகளை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறைவனின் கட்டளைக்கிணங்க தனது ஒரே மகன் இஸ்மாயிலை தியாகம் செய்யத் துணிந்த இப்ராஹிம் நபியின் உன்னதமான இறை பக்தியையும், தியாகத்தையும் நினைவு கூரும் வகையில் பக்ரீத் திருநாள் கொண்டாடப்படுகிறது. இறை நம்பிக்கை, தியாகம், கருணை, பகிர்வு, மனித நேயம் ஆகிய உயரிய விழுமியங்களை மனித குலத்திற்கு உணர்த்தும் புனிதப் பெருநாளாக பக்ரீத் திகழ்கிறது.

ஏழை, எளிய மக்களுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதையும், சமூகத்தில் அன்பும், சமத்துவமும் நிலைக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தும் பக்ரீத் திருநாளில் சமுதாயத்தில் மனித நேயமும், மத நல்லிணக்கமும் மேலும் தழைத்தோங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அனைவருக்கும் எனது பக்ரீத் திருநாள் வாழ்த்துகளை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக் கொள்கிறேன்" என்று கூறியுள்ளார்.

திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில்: "தியாகத் திருநாளான பக்ரீத் திருநாளில், என்றென்றும் என் நேசத்திற்கும் பாசத்திற்கும் உரியோராகத் திகழும் இஸ்லாமியப் பெருமக்கள் அனைவருக்கும் எனது இனிய வாழ்த்துகள்! அவர்களது வாழ்வில் நலமும் வளமும் பெருகட்டும்!

"ஈத்துவக்கும் இன்பம்" என்று வள்ளுவப் பெருந்தகையால் போற்றப்பட்ட ஈகைப் பண்போடு, ஈட்டிய பொருளில் ஒரு பகுதியை ஏழை, எளியோர் இன்னல் தீர வழங்கி மகிழ்வதை வாழ்வறமாகக் கொண்டு, நபிகள் நாயகம் வழங்கிய அறிவுரைகளை வாழ்க்கை நெறியாகக் கடைப்பிடித்து வாழும் இஸ்லாமியப் பெருமக்களது வாழ்வில் அமைதியும் மகிழ்ச்சியும் நிலைபெறட்டும்.

இஸ்லாமிய சமூகத்திற்கும் திமுகவுக்கும் இடையேயான உறவு, அரசியல் மற்றும் சமூகக் காரணங்களைத் தாண்டிய ஆழத்தையும், மேன்மையையும், உண்மையான பிணைப்பையும் கொண்டது. திமுக ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும், இஸ்லாமிய சமூகத்தின் பாதுகாப்புக்காகவும் உரிமைகளுக்காகவும் தோளோடு தோள் நின்று போராடும் உணர்வைக் கொண்ட உற்ற தோழமை என்பதை விவரிக்கத் தேவையில்லை. அந்த உறவும் நெருக்கமும் என்றென்றும் தொடரும் என்பதை, இந்த நன்னாளில் மேலும் உறுதி செய்ய விரும்புகிறேன்.

இஸ்லாமிய மக்கள் அனைவருக்கும் எனது நெஞ்சம் கனிந்த பக்ரீத் பெருநாள் நல்வாழ்த்துகளை மீண்டும் உரித்தாக்குகிறேன்" என்று மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில்: "இறை நம்பிக்கை உள்ளவர்கள் எந்தத் தியாகத்திற்கும் தயங்க மாட்டார்கள் என்ற தத்துவத்தைப் பறைசாற்றும் திருநாளாம் 'பக்ரீத்' திருநாளைக் கொண்டாடும் இஸ்லாமியப் பெருமக்கள் அனைவருக்கும் எனது இதயம் கனிந்த 'பக்ரீத்' திருநாள் நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இறைவனின் கட்டளையை ஏற்று, தனது ஒரே மகன் இஸ்மாயிலை தியாகம் செய்ய முன்வந்த இறைத் தூதர் இப்ராஹிம் அவர்களின் ஈடு இணையற்ற தியாகத்தை நினைவு கூரும் தினமே பக்ரீத் திருநாளாகும். இறைவனின் விருப்பத்திற்கு கீழ்படிந்து வாழ்வதே சிறந்த வாழ்க்கை நெறி என்று உலகிற்கு பறைசாற்றும் பொன்னாள் இந்நாளாகும்.

நாட்டின் வளர்ச்சிக்கும், சமுதாய முன்னேற்றத்திற்கும் தடைக் கற்களாகத் திகழ்கின்ற அதர்மம், அநீதி, சூழ்ச்சி, வன்மம் ஆகியவற்றை வேரோடும், வேரடி மண்ணோடும் ஒழித்து, நற் சிந்தனைகளும், நன்னெறிகளும் வெற்றி பெற எண்ணற்ற தியாகங்களும், அர்ப்பணிப்புகளும் தேவைப்படும். இறைத் தூதரின் தியாகங்களை மனதில் நிலை நிறுத்தி, மனித நேயம் தழைக்க அர்ப்பணிப்பு உணர்வுடன் பாடுபடுவோம் என இந்த பக்ரீத் திருநாளில் நாம் அனைவரும் உறுதியேற்போம்.

இஸ்லாமியப் பெருமக்கள் மகிழ்ச்சியோடு கொண்டாடும் இந்த இனிய திருநாளில், உலகில் அன்பும், அமைதியும் தழைத்தோங்கிட, அனைவரும் மனித நேயத்துடனும், சகோதரத்துவத்துடனும், தியாகச் சிந்தனையுடனும் வாழ்ந்திட வேண்டும் என்று மனதார வாழ்த்தி, இஸ்லாமிய சகோதர, சகோதரிகள் அனைவருக்கும், எம்ஜிஆர், ஜெயலலிதாவின் நல்வழியில், எனது பக்ரீத் திருநாள் வாழ்த்துகளை மீண்டும் ஒருமுறை உரித்தாக்கிக்கொள்கிறேன்" என்று பழனிசாமி கூறியுள்ளார்.

# தி.மலை அண்ணாமலையார் கோயிலில் பிரசாதங்களுக்கு தயாரிப்பு, காலாவதி தேதி ஒட்டும் பணி தீவிரம்



திருவண்ணாமலை:மே,28-

திருவண்ணாமலை அண்ணா மலையார் கோயிலில் விற்பனை செய்யப்படும் பிரசாதங்களுக்கு தயாரிப்பு தேதி மற்றும் காலாவதியாகும் தேதி ஒட்டும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.இந்து சமய அறநிலைய துறை அமைச்சர் சீ.ரமேஷ் கடந்த மே 24ம் தேதி திருச்சி மாவட்டம் திருவாணைக்காவல் அகிலாண்டேஸ்வரி உடனுறை ஜம்புகேசுவரர் கோயிலில் ஆய்வு செய்தார். அப்போது, கோயில் பிரசாத விற்பனை நிலை யத்தில் விற்பனை செய்யப்படும் உணவு பொருட்கள் மற்றும் பிரசாதங்கள் உணவு பாதுகாப்பு விதிமுறைகள் முழுமையாக கடைபிடிக்கப்படுகிறதா?, உணவு பொருட்களின் தயாரிப்பு தேதி, காலாவதி தேதி குறிப்பிடப்பட்டுள்ளதாக என ஆய்வு செய்தார். அப்போது, தேதி குறிப்பிடா மல் விற்பனை செய்வதை கண்டறிந்த அமைச்சர் உடனடியாக தயாரிப்பு, காலாவதி தேதி குறிப்பிடாமல் கோயில்களில் பிரசாதங்கள், உணவு பொருட்களை விற்பனை செய் யக்கூடாது என உத்தரவிட்டார்.

அதைத்தொடர்ந்து, திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலில் பக்தர்களுக்கு விற்பனை செய்யப்படும் பிரசாதங்களின் பாக்கெட்டுகளில் தயாரிப்பு மற்றும் காலாவதி ஆகும் தேதி அச்சிட்டு ஒட்டும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர். இதுவரை கோயிலில் விற் பனை செய்யப்பட்டு வந்த பிரசாதங்களில் தயாரிப்பு, காலாவதி தேதி குறிப்பிடாமல் விற்பனை செய்யப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது

# அய்யாதுரை ஆசான் நினைவு சிலம்பம் சாம்பியன்ஷிப் 2026! ஒட்டுமொத்த கோப்பையைத் தட்டித் தூக்கிய திசை சிலம்பப் பள்ளி



திசையன்விளை மே.28-

திருநெல்வேலி மாவட்டம் திசையன்விளை அய்யாதுரை ஆசான் சிலம்பப் பள்ளியின் சார்பாக, அய்யாதுரை ஆசான் நினைவு சிலம்பம் சாம்பியன்ஷிப் 2026 போட்டிகள் வெகு சிறப்பாக நடைபெற்றது. இப்போட்டியில் திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி ஆகிய நான்கு மாவட்டங்களைச் சேர்ந்த ஏராளமான சிலம்ப வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் ஆர்வத்துடன் கலந்துகொண்டு தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர். ஒற்றைக்கம்பு வீச்சு, இரட்டைக் கம்பு வீச்சு மற்றும் கம்பு சண்டை எனப் பல்வேறு பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் அதிரடி காட்டிய திசையன்விளை திசை சிலம்பப் பள்ளி ஒட்டுமொத்த சாம்பியன்ஷிப் பட்டத்தைக் கைப்பற்றி சாதனை படைத்தது. வெற்றி பெற்ற சாதனையாளர்களுக்கு, திருநெல்வேலி நாடாளுமன்ற உறுப்பினர் ராபர்ட் ப்ரூஸ் அவர்களின் மகன் டாக்டர் ஜெபன் செல்ல ப்ரூஸ் கலந்துகொண்டு சாம்பியன்ஷிப் கோப்பைகளை வழங்கிப் பாராட்டினார். இப்போட்டிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் அய்யாதுரை ஆசான் சிலம்பத்தின் தலைவர் விவேக் வி. முருகன், செயலாளர் முனைவர் மி. பாலசுப்பிரமணியன், பொருளாளர் J. தினேஷ் கண்ணன், மற்றும் விளையாட்டுப் போட்டி இயக்குநர் I. அரிசிவபாலன் ஆகியோர் சிறப்பாகச் செய்திருந்தனர்.

மேலும், தமிழ்நாடு சிலம்பாட்ட கழகப் பொருளாளரும் விருதுநகர் மாவட்டச் செயலாளருமான S. ஹரி பாஸ்கரன், தமிழ்நாடு சிலம்பாட்ட கழக இணைச் செயலாளரும் தென்காசி மாவட்டச் செயலாளருமான வி. சேர்மபாண்டி, மற்றும் இந்திய சிலம்பம் கூட்டமைப்பின் பிரதான போட்டி இயக்குநரும் நெல்லை மாவட்டச் செயலாளருமான சிலம்பு. கி. சுந்தர் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகப் பங்கேற்றுப் போட்டிகளைச் சிறப்பித்தனர்.*சக்கரவியூகம் வாய்ஸ்:*தமிழர்களின் பாரம்பரிய தற்காப்புக் கலையான சிலம்பத்தை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்லும் திசையன்விளை அய்யாதுரை ஆசான் சிலம்பப் பள்ளியின் இந்த முயற்சி போற்றத்தக்கது! மொபைல் திரைகளில் முடங்கிக் கிடக்கும் இன்றைய இளைய சமூகத்திற்கு மத்தியில், நான்கு மாவட்ட வீரர்களை ஒன்றிணைத்து உடல் வலிமையையும், மன ஒருமைப்பாட்டையும் வளர்க்கும் இதுபோன்ற போட்டிகளுக்குத் தமிழக அரசும், விளையாட்டுத் துறையும் கூடுதல் நிதியுதவிகளை வழங்கி ஊக்குவிக்க வேண்டும் என்பதே திசையன்விளையின் கறாரான பார்வை

# சிஎன்ஜி எரிவாயு விலை கிலோவுக்கு ரூ.2 உயர்வு: 11 நாட்களில் 4வது முறை அதிகரிப்பு



புதுடெல்லி:மே,28-

ஆட்டோ, கார்களுக்கு பயன்படுத்தப்படும் சிஎன்ஜி எரிவாயு விலை நேற்று கிலோவுக்கு ரூ.2 உயர்த்தப்பட்டுள்ளது. கடந்த 11 நாட்களில் இதன் விலை நான்காவது முறையாக உயர்ந்துள்ளதால் பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.அமெரிக்கா ஈரான் இடையிலான போர் காரணமாக ஈரான் எல்லையை ஒட்டியுள்ள ஹார்முஸ் ஜலசந்தி மூடப்பட்டு, வளைகுடா நாடுகளில் இருந்து கச்சா எண்ணெய் ஏற்றுமதி முடங்கியுள்ளது. இதனால் சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்து வருகிறது. இதனால் இந்திய எண்ணெய் நிறுவனங்களுக்கு ஏற்படும் இழப்பை ஈடு செய்ய கடந்த 15ம் தேதி பெட்ரோல், டீசல் விலை லிட்டருக்கு ரூ.3 உயர்த்தப்பட்டது. அதன் பிறகு பெட்ரோல், டீசல் விலை 4 முறை உயர்த்தப்பட்டது. இதுபோல் ஆட்டோ மற்றும் கார்களுக்கு பயன்படுத்தப்படும் சிஎன்ஜி எரிவாயு விலை கடந்த 15ம் தேதி டெல்லி தலைநகரப் பிராந்தியத்தில் கிலோவுக்கு ரூ.2 உயர்த்தப்பட்டது. இதையடுத்து 22ம் தேதி 1 ரூபாயும் 24ம் தேதி 1 ரூபாயும் உயர்த்தப்பட்டது. இந்நிலையில் சிஎன்ஜி எரிவாயு விலை நேற்று கிலோவுக்கு ரூ.2 உயர்த்தப்பட்டுள்ளது. நேற்று காலை 6 மணி முதல் அமலுக்கு வந்துள்ள இந்த புதிய விலை மாற்றத்தின் படி, டெல்லியில் தற்போது ஒரு கிலோ சிஎன்ஜி விலை ரூ.83.09 ஆக உள்ளது.

கடந்த 11 நாட்களில் சிஎன்ஜி விலை உயர்த்தப்படுவது இது 4வது முறையாகும். இதன் மூலம் 11 நாட்களில் மொத்தம் ரூ.7 விலை உயர்ந்துள்ளது. இருப்பினும், வீடுகளுக்கு விநியோகிக்கப்படும் குழாய் வழி இயற்கை எரிவாயு அல்லது வீட்டு உபயோக எல்பிஜி சிலிண்டர்களின் விலையில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை.எனினும் பெட்ரோல், டீசல் மற்றும் சிஎன்ஜி எரிவாயு விலை தொடர்ந்து உயர்ந்து வருவது தினசரி வாகனங்களை பயன்படுத்துவோரை அதிர்ச்சி அடையச் செய்துள்ளது. மேலும் இந்த விலை உயர்வு அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வுக்கும் வழி வகுப்பதால் பொதுமக்களை கவலை அடையச் செய்துள்ளது.



■ சேலம் மாநகராட்சி மைய அலுவலக மாமன்ற கூட்ட அரங்கில் மேயர் ஆ.இராமச்சந்திரன், தலைமையில், ஆணையாளர் லலித் ஆதித்ய நீலம் முன்னிலையில் மாமன்ற இயல்பு கூட்டம் நடைபெற்றது. உடன் துணை மேயர் மா.சாரதாதேவி, மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அனைத்து அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



# ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவர்கள் பற்றாக்குறை

## செவிலியரே ஊசிபோட்டு சிகிச்சை அளிக்கும் அவலம்!

திருவண்ணாமலை:மே.28-

திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் அருகே அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் பற்றாக்குறையால் நோயாளிகள் கடும் சிரமங்களுக்கு ஆளாகின்றனர்.வேட்டவலம் பெரூராட்டியில் பகுதியில் செயல்படுத்தபட்டு வரும் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் வேட்டவலம் பகுதியை சுற்றியுள்ள அணுகுமலை, நெய்வானத்தம், வைப்பூர், நாரையூர், அண்டம் பள்ளம் உள்ளிட்ட கிராமங்களை சேர்ந்த பொது மக்கள் தினசரி வந்து சிகிச்சை பெற்று பயனடைந்து வருகின்றனர்.

இந்நிலையில் அரசு மருத்துவமனையில் மருத்துவர்கள் பற்றாக்குறையால் செவிலியரே நோயாளிகளுக்கு ஊசிபோட்டு, மருந்து மாத்திரைகள் வழங்கும் அவல நிலை உருவாகியுள்ளது. மருத்துவர்கள் இல்லாததால் நோயாளிகள் பல மணிநேரம் காத்து கிடக்கும் அவலம் நீடித்து வருகிறது.தமிழ்நாடு அரசு இதனை கருத்தில் கொண்டு உடனடியாக மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் காலி பணியிடங்களை நிரப்ப வேண்டும் என்று பொதுமக்கள் வலியுறுத்தி உள்ளனர்

# உரிமையியல் வழக்குகளில் தமிழக அரசுக்காக ஆஜராகி வாதிட 17 அரசு வழக்கறிஞர்கள் நியமனம்



சென்னை:மே,28-

உரிமையியல் வழக்குகளில் தமிழக அரசுக்காக ஆஜராகி வாதிட ஏதுவாக 17 அரசு வழக்கறிஞர்களை நியமித்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.தமிழக அரசு தரப்பில் உரிமையியல் வழக்குகளில் ஆஜராகி வாதிடும் வகையில் சென்னை உயர் நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்ற மதுரை கிளையில் தற்காலிக அடிப்படையில் 17 பேரை அரசு வழக்கறிஞர்களாக நியமித்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.அதன்படி, அரசு தலைமை வழக்கறிஞர் விஜய் நாராயண் பரிந்துரையின்பேரில் சென்னை உயர் நீதிமன்றத்துக்கு அரசு வழக்கறிஞர்களாக ஆர்.கவுரி, ஜி. தன மாத்ரி, முகமது பயாஸ் அலி, எம்.சிவவர்த்தனன், எம்.குருபிரசாத், அமிர்த பூங்கொடி தினகரன், கே.சதீஷ், கே.சுரேந்தர், டோமினிக் எஸ்.டேவிட், ஆர்.சக்கரவர்த்தி ஆகியோர் மாநில அரசு ப்ளீடர்கள் என்ற அந்தஸ்தில் நியமிக்கப்பட்டுள்ளனர்.இதேபோல உயர் நீதிமன்ற மதுரை கிளையில் அரசு வழக்கறிஞர்களாக பி.சரவணன், எம்.பி.செந்தில், ஆர். பார்த்திபன், ஐ.பினய்காஷ், எஸ்.சிவசுப்ரமணியன், எஸ்.சிவதிலகர், கே.பொற்கொடி ஆகியோர் அரசு ப்ளீடர்கள் என்ற அந்தஸ்தில் நியமிக்கப்பட்டுள்ளனர்.அரசு வழக்கறிஞர்கள் நியமன விதிகளின்படி நிரந்தர அரசு வழக்கறிஞர்கள் முறையாக நியமிக்கப்படும் வரை இவர்கள் அரசு சார்பில் ஆஜராகி வாதிடுவர் என தமிழக அரசின் பொதுத்துறை முதன்மைச் செயலர் ரீட்டா ஹரிஷ் தாக்கர் உத்தரவிட்டுள்ளார்

# அணுசக்தி மின்திட்டங்களை செயல்படுத்த இந்திய அணுசக்தி கழகம் என்எல்சி ஒப்பந்தம்



கடலூர்: மே.28-

அணுசக்தி திட்டங்களைச் செயல்படுத்த, இந்திய அணுசக்தி கழகத்துடன் என்எல்சி இந்தியா நிறுவனம் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. 700 மெகாவாட் திறன் கொண்ட உள்நாட்டு அழுத்தப்பட்ட கனநீர் அணு உலை அடிப்படையிலான அணுசக்தி உலைகளை மேம்படுத்துவதற்காக இந்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்று முன்தினம் (மே 25) என்எல்சி இந்தியா நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் பிரசன்ன குமார் மோட்டு பள்ளி, இந்திய அணுசக்தி கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் புவன் சந்திர பதக் மற்றும் இரு நிறுவனங்களின் செயல்பாட்டு இயக்குநர்கள் முன்னிலையில் நெய்வேலியில் கையெழுத்தானது.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் என்எல்சி இந்தியா நிறுவனத்தின் மின்துறை இயக்குநர் எம்.வெங்கடாச்சலம் மற்றும் இந்திய அணுசக்தி கழகத்தின் தொழில்நுட்பப் பிரிவு இயக்குநர் ராஜேஷ் ஆகியோர் கையெழுத்திட்டனர்.இந்த ஒத்துழைப்பானது, முன்மொழியப்பட்ட கூட்டு முயற்சி கட்டமைப்பின் மூலம், இந்திய அணுசக்தி கழகத்தின் தற்போதைய மற்றும் வரவிருக்கும் 700 மெகாவாட் அழுத்தப்பட்ட கனநீர் அணு உலைத் திட்டங்களில் முதலீட்டு வாய்ப்புகளையும் வழங்குகிறது.

இந்த நிகழ்வில் பேசிய என்எல்சி இந்தியா நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் பிரசன்ன குமார் மோட்டு பள்ளி கூறியதாவது: இந்திய அணுசக்தி கழகத்துடனான இந்தக் கூட்டாண்மை ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க மைல்கல் ஆகும். நாட்டின் நீண்டகால எரிசக்தி பாதுகாப்பை உறுதி செய்வதிலும், நிகர பூஜ்ய கார்பன் உமிழ்வை அடைவதற்கான தேசத்தின் உறுதிப்பாட்டுக்கு ஆதரவளிப்பதிலும் அணுசக்தி ஒரு முக்கியப் பங்காற்றும். இந்தக் கூட்டு முயற்சியானது, மின்சாரத் துறையில் என்எல்சி இந்தியா நிறுவனத்துக்கு இருக்கும் விரிவான அனுபவத்தையும், அணுசக்தி துறையில் இந்திய அணுசக்தி கழகத்தின் நிரூபிக்கப்பட்ட நிபுணத்துவத்தையும் ஒன்றிணைத்து, நாட்டுக்கு நம்பகமான, நீடித்த மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த அடிப்படை மின் திட்டங்களின் வளர்ச்சிக்கு நிச்சயமாக வழிவகுக்கும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. இவ்வாறு தெரிவித்தார்

# எஸ்ஐஆர் பணிகளை மேற்கொள்ள தேர்தல் ஆணையத்துக்கு அதிகாரம் உண்டு: உச்ச நீதிமன்றம் தீர்ப்பு



புதுடெல்லி:மே,28-

"சிறப்பு தீவிர திருத்த நடவடிக்கையை மேற்கொள்ள இந்திய தேர்தல் ஆணையத்துக்கு அதிகாரம் உள்ளது என்றும் அதேநேரத்தில், வாக்காளர் பட்டியலில் பெயர்களைச் சேர்க்க தேர்தல் ஆணையம் மறுப்பது என்பது சம்பந்தப்பட்ட நபரின் குடியுரிமையைப் பறிப்பதாக அர்த்தமாகாது" என்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.பிஹாரில் சிறப்பு திருத்தம் மேற்கொள்ளப்பட்டதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் பல்வேறு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. 1950ம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் விதிகளின்படி, இவ்வளவு பரந்த அறவில் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளை மேற்கொள்வதற்கு இந்திய தேர்தல் ஆணையத்துக்கு அதிகாரம் இல்லை என்று வாதிடப்பட்டது.இந்த மனுக்களை தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையிலான அமர்வு விசாரித்தது. விசாரணை நிறைவடைந்ததை அடுத்து தீர்ப்பு ஒத்திவைக்கப்படுவதாக கடந்த ஜனவரி 29ம் தேதி தேதி அறிவிக்கப்பட்டது. இந்நிலையில், இந்த வழக்கில் உச்ச நீதிமன்றம் இன்று தனது தீர்ப்பை வழங்கியுள்ளது.அதில், "சிறப்பு தீவிர திருத்த (ஷிமிஸி) நடவடிக்கையை மேற்கொள்ள இந்திய தேர்தல் ஆணையத்துக்கு அதிகாரம் உள்ளது. எந்தவொரு சட்டரீதியான அல்லது அரசியலமைப்பு ரீதியிலான விதியையும் தேர்தல் ஆணையம் மீறவில்லை. எஸ்ஐஆர் நடவடிக்கையின்போது குடியுரிமையை ஆய்வு செய்யும் அதிகாரம் தேர்தல் ஆணையத்துக்கு உண்டு. அதேநேரத்தில், வாக்காளர் பட்டியலில் பெயர்களைச் சேர்க்க தேர்தல் ஆணையம் மறுப்பது என்பது சம்பந்தப்பட்ட நபரின் குடியுரிமையைப் பறிப்பதாக அர்த்தமாகாது. வாக்காளர் பட்டியலில் இருந்து ஒருவரது பெயர் நீக்கப்பட்டால், அது மேலதிக சட்டரீதியான விசாரணைக்கு உட்பட்டதாக இருக்கும். குடியுரிமையை நிரூபிக்க இயலாத காரணத்தால் பெயர்கள் நீக்கப்பட்ட நபர்களை, உரிய சட்டரீதியான விசாரணைக்காக தகுந்த அதிகார அமைப்பிடம் தேர்தல் ஆணையம் அனுப்பி வைக்க வேண்டும்.சுதந்திரமான, நியாயமான தேர்தலுக்கும் எஸ்ஐஆர் நடவடிக்கைக்கும் இடையே நேரடி தொடர்பு இருக்கிறது. அரசியலமைப்பு சட்டக் கட்டமைப்பு மற்றும் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் கீழ் வாக்காளர் பட்டியல்களைத் திருத்தும் அதிகாரம் தேர்தல் ஆணையத்துக்கு உள்ளது" என தெரிவிக்கப்பட்டுள்ளது. வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவிர திருத்தத்தை இந்திய தேர்தல் ஆணையம் முதலில் பிஹாரில் தொடங்கியது. இதையடுத்து, தமிழ்நாடு, மேற்கு வங்கம் உட்பட பல மாநிலங்களுக்கும் அது விரிவுபடுத்தியது. தேர்தலுக்கு முன்பாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில், அது பல்வேறு கேள்விகளை எழுப்பியது. இதன் காரணமாக பல்வேறு அமைப்புகள் சிறப்பு தீவிர திருத்தத்துக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் வழக்குகளைத் தொடுத்தனர். இந்நிலையில், சிறப்பு தீவிரத் திருத்தம் செல்லுபடியாகும் என்றும் அதை நடத்துவதற்கு இந்திய தேர்தல் ஆணையத்துக்கு அதிகாரம் உள்ளது என்றும் உச்ச நீதிமன்ற அமர்வு தனது உத்தரவில் உறுதிப்படுத்தி இருக்கிறது.

## கோவில்பட்டி அருகே அனுமதியின்றி பட்டாசு தயாரித்தபோது விபத்து 2 பேர் உயிரிழப்பு

கோவில்பட்டி:மே,28-
கோவில்பட்டி அருகே அனுமதியின்றி பட்டாசு தயாரித்தபோது ஏற்பட்ட வெடி விபத்தில் பெண் உட்பட 2 பேர் உயிரிழந்தனர். கோவில்பட்டி அருகே புளியங்குளம் கிராமத்தின் மேல்புறம் காட்டுப்பகுதியில் தனியாருக்கு சொந்தமான கோயில் உள்ளது. இந்தக் கோயில் அருகே உள்ள ஒரு கட்டிடத்தில் சட்டவிரோதமாக பட்டாசு தயாரிக்கும் பணி நடந்து வந்துள்ளது.இந்நிலையில், நேற்று இரவு பட்டாசு தயாரிக்கும் பணி நடந்தபோது திடீரென வெடி விபத்து ஏற்பட்டது. இதில் அந்தக் கட்டிடம் முற்றிலுமாக இடிந்து சேதமடைந்தது.இந்த விபத்தில் விருதுநகர் மாவட்டம் புல்லகவுண்டன்பட்டியை சேர்ந்த ஈஸ்வரன் மனைவி மாலதி (25), புளியங்குளத்தை சேர்ந்த ஆத்தியப்பன் மகன் ஐயப்பன் (30) ஆகியோர் இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்தனர். மேலும், விருதுநகர் மாவட்டம் சாத்தூர் அருகே மஞ்சள் ஓடைப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த சீனிவாசன் மகன் சூரியபிரகாஷ் (25) என்பவர் காயமடைந்தார்.தகவல் அறிந்து கோவில்பட்டி தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் குழு சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று இடிபாடுகளில் சிக்கியிருந்த 2 பேரின் சடலங்களை மீட்டு திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.
மேலும், காயமடைந்த சூரிய பிரகாசுக்கு கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் முதலுதவி அளிக்கப்பட்டு மேல் சிகிச்சைக்காக தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். இந்த விபத்து குறித்து கோவில்பட்டி மேற்கு காவல் நிலைய போலீஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.தொடர்ந்து, சட்ட விரோதமாக பட்டாசு தயாரிப்பில் ஈடுபட்டதாக புளியங்குளம் கிராமத்தைச் சேர்ந்த சரவணன், அவரது மனைவி மா ரீஸ்வரி (30), கட்டிட உரிமையாளர் குருநாதன் (65) ஆகிய 3 பேர் மீது கோவில்பட்டி மேற்கு காவல் நிலைய போலீஸார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.மேலும், மாரீஸ்வரி மற்றும் குருநாதன் ஆகிய 2 பேரை கைது செய்து போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## இந்தியாவில் எபோலா தொற்று இதுவரை இல்லை: மத்திய சுகாதார அமைச்சகம்

புதுடெல்லி:மே,28-
இந்தியா வந்துள்ள உகாண்டா நாட்டைச் சேர்ந்தவருக்கு நடத்தப்பட்ட பரிசோதனையில் அவருக்கு எபோலா தொற்று இல்லை என்பது உறுதியான நிலையில், இந்தியாவில் எபோலா தொற்று பாதிப்பு இதுவரை பதிவாகவில்லை என்று மத்திய சுகாதார அமைச்சகம் அறிவித்துள்ளது.
ஆப்ரிக்காவின் காங்கோ மற்றும் உகாண்டாவில் எபோலா நோய் பரவல் பதிவாகியுள்ளதன் அடிப்படையில், இதனை சர்வதேச பொது சுகாதார அவசரநிலை (PHE-IC) என உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது. மேலும், காங்கோ மற்றும் உகாண்டாவில் தற்போது பரவி வரும் எபோலா வைரஸ் நோயின் 'புண்டிபுகியோ' (Bundibugyo) வகைப் பரவலை, ஆப்ரிக்க கண்ட அளவிலான பொது சுகாதார அவசரநிலை (PHECS) என ஆப்பிரிக்க




நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையங்கள் (Africa CDC) அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளன.
மே 22 அன்று, உலக சுகாதார நிறுவனம் வெளியிட்ட பரிந்துரைகளில், புண்டிபுகியோ வைரஸ் கண்டறியப்பட்ட பகுதிகளிலிருந்து காய்ச்சல் அறிகுறிகளுடன் வரக்கூடிய பயணிகளைக் கண்டறிந்து, கண்காணிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், புண்டிபுகியோ வைரஸ் பாதிப்பு கண்டறியப்பட்ட பகுதிகளுக்குப் பயணம் மேற்கொள்வதைத் தவிர்க்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.
இதையடுத்து, மறு அறிவிப்பு வரும் வரை, காங்கோ, உகாண்டா மற்றும் தெற்கு சூடான் ஆகிய நாடுகளுக்கு அத்தியாவசியமற்ற பயணங்களை மேற்கொள்வதைத் தவிர்க்குமாறு இந்திய அரசு அனைத்து இந்தியர்களுக்கும் அறிவுறுத்தி உள்ளது.
இது தொடர்பாக வெளியிடப்பட்ட அறிக்கையில், "காங்கோ, உகாண்டா நாடுகளில் வசித்து வருபவர்கள் மற்றும் இந்நாடுகளுக்குப் பயணம் மேற்கொள்பவர்கள், உள்ளூர் அதிகாரிகளால் வெளியிடப்படும் பொது சுகாதார வழிகாட்டுதல்களைக் கண்டிப்பாகப் பின்பற்றுமாறும், கூடுதல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்படுகிறார்கள்" என்று மத்திய அரசு குறிப்பிட்டுள்ளது.
இந்நிலையில் உகாண்டாவில் இருந்து சமீபத்தில் இந்தியா வந்த பயணி ஒருவருக்கு லேசான உடல் வலி அறிகுறிகள் இருந்ததால் அவர் பெங்களூருவில் உள்ள தொற்று நோய்கள் மருத்துவமனையில் தனிமைப்படுத்தப்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது. அவரிடம் இருந்து மாதிரி சேகரிக்கப்பட்டு ஆய்வுக்காக தேசிய வைரஸ் ஆய்வு நிறுவனத்துக்கு அனுப்பப்பட்டது. அந்த பரிசோதனையின் முடிவில் அவருக்கு எபோலா வைரஸ் பாதிப்பு இல்லை என்பது தெரியவந்துள்ளது. இதையடுத்து மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "இந்தியாவில் எபோலா தொற்று இதுவரை பதிவாகவில்லை. இவ்விஷயத்தில் உலக சுகாதார அமைப்பின் வழிகாட்டுதல்களுக்கு இயங்க மத்திய சுகாதாரத் துறை தீவிர கண்காணிப்பை மேற்கொண்டு வருகிறது. அனைத்து அறிவிக்கப்பட்ட நுழைவுப் பகுதிகளிலும் பரிசோதனைகள் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் தொடர்கின்றன. எனவே, மக்கள் பீதி அடைய வேண்டாம். தவறான தகவல்களைப் பரப்புவதை தவிர்க்க வேண்டும். அதிகாரப்பூர்வ தகவல்களை மட்டுமே நம்ப வேண்டும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ராஜாக்கள்பட்டியில் ஸ்ரீபட்டாளம்மன், ஸ்ரீமுத்தாலம்மன் கோவில் 25ஆம் ஆண்டு வெள்ளி விழா உற்சவம்

அலங்காநல்லூர் மே.28-
மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் ஒன்றியம் ராஜாக்கள்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ பட்டாளம்மன் மற்றும் ஸ்ரீ முத்தாலம்மன் திருக்கோவில் 25ஆம் ஆண்டு உற்சவ திருவிழா மிக விமரிசையாக நடைபெற்றது.விழாவின் முதல் நாள் அழகர்கோவில் சென்று தீர்த்தம் ஆடி வருதலும், அடுத்த நாள் கணபதி ஹோமம், கொடியேற்றம், சுப முகூர்த்த கால் ஊன்றுதல் மற்றும் காப்பு கட்டுதல் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. தொடர்ந்து ஸ்ரீ ராஜ கணபதி ஆலயத்தில் கிராம மக்கள் சார்பில் பொங்கல் வைத்து வழிபாடு செய்யப்பட்டது. அன்று இரவு பூசாரி வீட்டில் இருந்து நகைப்பெட்டி எடுத்து வரப்பட்டு, பட்டாளம்மனுக்கு மலர் அலங்காரங்களுடன் தீபாராதனை நடைபெற்றதுடன், கிராம மந்தையில் மதிய அறுசுவை அன்னதானமும் வழங்கப்பட்டது.அன்று மாலை ஸ்ரீ முத்தாலம்மன் பூஞ்சோலை செல்லுதல் மற்றும் மஞ்சள் நீராடுதல், பிரசாதம் வழங்குதலுடன் திருவிழா நிறைவு பெற்றது. இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை ராஜாக்கள்பட்டி கிராம பொதுமக்கள் மிகச் சிறப்பாகச் செய்திருந்தனர்.





## அச்சம்பட்டி கிராமத்தில் மந்தையம்மன் திருக்கோவில் 18ஆம் ஆண்டு முளைப்பாரி திருவிழா

அலங்காநல்லூர்.மே.28-
மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள அச்சம்பட்டி கிராமத்தில் ஸ்ரீ மந்தையம்மன் திருக்கோவிலில் வைகாசி மாத உற்சவ விழாவை முன்னிட்டு, 18 ஆம் ஆண்டு முளைப்பாரி திருவிழா நடைபெற்றது. முன்னதாக பக்தர்களுக்கு காப்பு கட்டுதல், முளைப்பாரி இடுதல், நிகழ்ச்சி தொடங்கி இரண்டு நாள் நிகழ்ச்சியாக திருவிளக்கு பூஜை, மாவிளக்கு எடுத்தல் நேர்த்திக்கடனாக அக்கினி சட்டி எடுத்தல், அழகு குத்துதல், முளைப்பாரி எடுத்து நேர்த்திக்கடன் செலுத்திய பக்தர்கள். இந்த திருவிழாவில் உள்ளூர் மற்றும் வெளியூர் பக்தர்கள் கலந்து கொண்டனர் கோவிலுக்கு வருகை தந்த பக்தர்களுக்கு பூஜை பொருட்களும் அன்னதானமும் வழங்கப்பட்டது. விழாவுக்கான ஏற்பாடுகளை அச்சம்பட்டி கிராம பொதுமக்கள் மற்றும் மந்தையம்மன் இளைஞர் அணி விழா குழுவினர் செய்தனர்.

## வங்கதேசத்தில் மழைக்கு நடுவே ரயிலின் மேற்கூரையில் அமர்ந்து பயணிக்கும் இளைஞர்கள்

டாக்கா:மே,28-
வங்கதேசத்தில் மழையில் நனைந்தபடி ரயிலின் மேற்கூரையில் நின்று கொண்டும், உட்கார்ந்து கொண்டும் ஆபத்தான முறையில் பயணம் மேற்கொண்ட இளைஞர்களின் வீடியோ சோஷியல் மீடியாக்களில் வைரலாகி வருகிறது.பக்ரீத் பண்டிகையை ஒட்டி வங்கதேச தலைநகர் டாக்காவில் பணிபுரிந்து வரும் பல வெளியூர் மக்கள், பண்டிகையை கொண்டாட தங்கள் சொந்த ஊருக்கு கூட்டம் கூட்டமாக புறப்பட்டு சென்று வருகின்றனர். இதன் காரணமாக ரயில் மற்றும் பேருந்து நிலையங்களில் மக்கள் கூட்டம் அலைமோதுகிறது. ரயில் பெட்டிகளுக்குள் அமர்ந்து செல்ல மற்றும் நின்று கொண்டே செல்ல கூட இடம் கிடைக்காதவர்கள், தங்கள் ஊருக்கு செல்லும் ரயிலின் மேற்கூரையின் மேல் ஏறி பயணம் செய்தனர். அதுவும் தற்போது அங்கு மழை பெய்து வரும் நிலையில் வைரலாகி வரும் வீடியோவில், சில இளைஞர்கள் கனமழை பெய்து கொண்டிருக்கும் போதே ரயிலின் மேற்கூரையின் மீதேறி உட்கார்ந்தபடியும், நின்று கொண்டும் ஆபத்தான முறையில் பயணம் செய்வது பதிவாகி இருக்கிறது.
பண்டிகை கொண்டாடங்களின் போது தங்கள் சொந்த ஊருக்கு செல்ல லட்சக்கணக்கான மக்கள் ஒரேநேரத்தில் முக்கிய ரயில் நிலையங்களில் குவிவதால் ரயில்களில் இடம் கிடைக்காமல், மக்கள் ரயிலின் மேற்கூரையின் மேல் ஏறி பயணம் செய்வது அங்கு வாடிக்கையாக உள்ளது. அவ்வப்போது ரயில்களின் மேற்கூரையில் கம்பிகள், பாலங்கள் மற்றும் மரக்கிளைகள் மோதி பலர் காயமடையும் சம்பவங்களும் நடக்கின்றன



■ சேலம் மாநகராட்சி இயல்பு கூட்டத்தில் வடக்கு தொகுதி எம்.எல்.ஏ சிவக்குமார் பங்கேற்பு. சேலம் மாநகராட்சி மாமன்ற இயல்பு கூட்டம் மேயர் இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் வடக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சிவக்குமார் பங்கேற்று மக்கள் பிரச்சினைகள் தொடர்பாக குறிப்பெடுத்துக் கொண்டார்.

## திருவள்ளூர் - சிறுமிக்கு பாலியல் தொல்லை அளித்தவருக்கு 10 ஆண்டுகள் சிறை

திருவள்ளூர்: மே.28-
கும்மிடிப்பூண்டி எளாவூர் பகுதியை சேர்ந்த 15 வயது சிறுமி, கடந்த 2023ம் ஆண்டு வீட்டில் தனியாக இருந்தார். எளாவூரை அடுத்த மேட்டுக்குப்பத்தைச் சேர்ந்த ஜெகநாதன் (35), வீட்டுக்குள் நுழைந்து, சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்துள்ளார்.சிறுமியின் பெற்றோர் அளித்த புகாரின் பேரில், கும்மிடிப்பூண்டி அனைத்து மகளிர் காவல் நிலைய போலீஸார் வழக்குப் பதிவு செய்தனர். இந்த வழக்கு விசாரணை, திருவள்ளூர் மாவட்ட போக்சோ சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்றது.அரசு தரப்பில் வழக்கறிஞர் புவனேஸ்வரி ஆஜராகி வாதாடினார். ஜெகநாதன் மீதான குற்றங்கள் நிரூபணமானதையடுத்து, மாவட்ட போக்சோ சிறப்பு நீதிமன்ற உமாமகேஸ்வரி ஜெகநாதனுக்கு, வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்த குற்றத்துக்கு 10 ஆண்டு சிறை, ரூ.10,000 அபராதம், பாலியல் தொல்லை கொடுத்த குற்றத்துக்கு 5 ஆண்டு சிறை, ரூ.10,000 அபராதம் விதித்தார். சிறுமிக்கு ரூ.1 லட்சம் ஒரு லட்சம் நிவாரணம் வழங்க வேண்டும் என்றும் அரசுக்கு நீதிபதி பரிந்துரைத்துள்ளார். செங்குன்றம் அருகே 5 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை அளித்தவருக்கு 17 ஆண்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

## தமிழகத்தில் 11 மாவட்டங்களுக்கு கனமழை: வானிலை ஆய்வு மையம்

சென்னை: மே,28-
தமிழகத்தில் 11 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்யும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் வெயில் வாட்டி வரக்கூடிய சூழலில் ஒரு சில பகுதிகளில் அவ்வப்போது மழை பெய்து வருகிறது.அதன்படி இன்று 11 மாவட்டங்களுக்கு கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருக்கிறது. தேனி, மதுரை, நீலகிரி, கோவை, கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், நாமக்கல், கரூர், திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல் அளித்துள்ளது

## திருமணத்துக்கு மணப் பெண்களை ஏற்பாடு செய்வதாக கூறி ம.பி.யில் 42 குடும்பத்தாரை ஏமாற்றிய தம்பதி கைது

போபால்:மே,28-
திருமணத்துக்கு மணப் பெண்களை ஏற்பாடு செய்து தருவதாகக் கூறி 42 குடும்பத்தாரை ஏமாற்றிய தம்பதியை மத்திய பிரதேச போலீஸார் கைது செய்துள்ளனர். மத்திய பிரதேச மாநிலம் தேவாஸ் நகரில் திருமண வரன் மையத்தை நடத்தி வருபவர்கள் முகேஷ் பைரங்கி, சுனிதா தம்பதியினர். ஆனால், இவர்கள் பெரும்பாலும் வரன் பார்த்து தராமல் மணப் பெண் விவரம் கேட்டு வருபவர்களை ஏமாற்றி வந்துள்ளனர்.இந்நிலையில் அண்மையில் மிகப்பெரிய கூட்டுத் திருமணத்தை நடத்தப் போகிறோம் என்று கூறி 42 மணமகன் வீட்டாரிடமிருந்து தலா ரூ.12 ஆயிரம் முதல் ரூ.25 ஆயிரம் வரை கட்டணம் பெற்றுள்ளனர். 42 குடும்பங்களிடமிருந்து சுமார் ரூ.10 லட்சத்துக்கும் அதிகமான பணத்தை அவர்கள் பெற்றுள்ளனர். இந்த மணமகன்கள்



பெரும்பாலானோருக்கு அதிக வயதாகியும் திருமணம் நடைபெறவில்லை.தகுந்த மணப்பெண் கிடைக்காததால் விரக்தியில் இருக்கும் குடும்பத்தாரை கண்டறிந்து அவர்களுக்கு மணப்பெண் ஏற்பாடு செய்து தருவதாக முகேஷ், சுனிதா தம்பதியினர் கூறி ஏமாற்றியுள்ளனர். மணப்பெண்கள் அனைவரும் இந்தூரிலுள்ள ஒரு அனாதை விடுதியில் வளர்ந்தவர்கள் என்று கூறி பெண்களின் புகைப்படங்களைக் காட்டியுள்ளனர்.இந்த புகைப்படங்கள் அனைத்தும் இன்டர்நெட்டில் இருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டவையாகும். மே 24ம் தேதி தேவாஸிலுள்ள ராதாகஞ்ச் கிளப் வளாகத்தில் திருமணம் நடைபெறும் என்றும், மணப்பெண் குடும்பத்தார் அனைவரும் அங்கு வந்து சேருமாறும் முகேஷ், சுனிதா கூறியுள்ளனர்.இந்நிலையில், மே 24ம் தேதி காலை ராதாகஞ்ச் கிளப் வந்தபோது அங்கு திருமணத்துக்கான ஏற்பாடுகள் எதுவும் நடைபெறவில்லை என்பதும் அங்கு மணப்பெண்களும் இல்லை என்பதையும் கண்டு மணமகன்கள் வீட்டார் அதிர்ச்சி அடைந்துள்ளனர். இது குறித்து கேட்டதற்கு இந்தூரில் இருந்து அவர்கள் கிளம்பி விட்டனர் என்றும் விரைவில் வந்து சேர்ந்து விடுவர் என்றும் முகேஷ், சுனிதா தம்பதியினர் சமாளித்துள்ளனர்.காலை 8 மணி முதல் இரவு 10 மணி வரை காத்திருந்த நிலையில், யாரும் வராததால் தாங்கள் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த மணமகன்கள், முகேஷ், சுனிதா தம்பதி மீது புகார் கொடுத்தனர். இதையடுத்து அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

## தமிழகத்துக்கு ஜூன் மாதத்துக்கான 9.91 டிஎம்சி தண்ணீர் வழங்க வேண்டும்: காவிரி மேலாண்மை ஆணைய கூட்டத்தில் வலியுறுத்தல்

சென்னை:மே,28-
தமிழகத்துக்கு 9.91 டிஎம்சி தண்ணீர் வழங்க வேண்டும் என, காவிரி மேலாண்மை ஆணைய கூட்டத்தில், தமிழகத்தின் சார்பில் வலியுறுத்தப்பட்டது. டெல்லியில் எஸ்.கே. ஹல்தார் தலைமையில், காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் 51வது கூட்டம் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்தில், தமிழகத்தின் உறுப்பினர் மற்றும் நீர்வளத் துறை செயலாளர் சத்யபிரதா சாகு, சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாகப் பங்கேற்றுத் தமிழகத்தின் கோரிக்கைகளை முன் வைத்தார்.கூட்டத்தில் பேசிய தமிழக உறுப்பினர், மேட்டூர் அணையின் தற்போதைய நீர் இருப்பு 40.742 டிஎம்சியாக



உள்ளதாகத் தெரிவித்தார். தற்போது, அணையில் இருந்து குடிநீர் தேவை, தொழிற்சாலை பயன்பாடு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு கருதி, விநாடிக்கு 1,003 கன அடி நீர் திறந்து விடப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.மேலும், நடப்பு நீர்ப்பாசன ஆண்டில் (202526), ஜூன் 1 முதல் மே 24ம் தேதி வரை பில்லி குண்டுலுவில், தமிழகத்துக்கு வழங்கப்பட வேண்டிய நீரின் அளவு 176.685 டிஎம்சி ஆகும். ஆனால், கர்நாடக அணைகளில் இருந்து வெளியேற்றப்பட்ட உபரி நீரையும் சேர்த்து மொத்தம் 329.166 டிஎம்சி நீர் தமிழகத்துக்குக் கிடைத்துள்ளது.இதனைச் சுட்டிக் காட்டிய கர்நாடக உறுப்பினர், தாங்கள் வழங்கிய உபரி நீரையும் கணக்கில் கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார். எனினும், கர்நாடகாவின் இந்த வாதத்தை தமிழக உறுப்பினர் சத்யபிரதா சாகு எதிர்த்தார்.கர்நாடகம் தனது நீர்த்தேக்கங்களில் தேக்க முடியாமல், வேறு வழியின்றி வெளியேற்றிய உபரி நீரினைத் தங்களுக்கு சாதகமாக சொந்தம் கொண்டாட முடியாது என்றும், அதனைத் தமிழகத்துக்கு வழங்கிய கணக்கில் சேர்க்க இயலாது என்றும், அவர் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.இந்திய வானிலை ஆய்வு மையத்தின் அறிக்கையின்படி, மே 26ம் தேதி கேரளாவில் தென்மேற்கு பருவமழை தொடங்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.எனவே, இப்பருவ மழை இயல்பான அளவில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாலும், கர்நாடக அணைகளில் போதிய நீர் இருப்பு உள்ளதாலும், வரும் ஜூன் மாதத்துக்கு தமிழகத்துக்கு வழங்கப்பட வேண்டிய 9.91 டிஎம்சி நீரை உச்ச நீதிமன்ற உத்தரவின்படி பில்லிகுண்டுலுவில் கர்நாடகம் உறுதி செய்ய வேண்டும் எனத் தமிழக அரசு சார்பில் காவிரி நீர்மேலாண்மை ஆணைய கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது

# தென்காசியில் கால்நடைகளின் விவரங்களை அறிய 'பார்கோடு' வசதி! கலெக்டர் கமல் கிஷோர் அதிரடி



தென்காசி மே. 28-
தென்காசி மாவட்டத்தில் கால்நடை வளர்ப்போர்கள் தங்களது கால்நடைகளின் முழு விவரங்களையும் எளிதாக அறிந்துகொள்ளும் வகையில், புதிய 'பார்கோடு' மற்றும் மின்னணு தகவல் தொழில்நுட்ப வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே. கமல் கிஷோர், இ.ஆ.ப. தெரிவித்துள்ளார். தேசிய மின்னணு கால்நடை இயக்கத் திட்டத்தின் கீழ், தென்காசி மாவட்டத்திலுள்ள 1,47,990 கால்நடைகளுக்கும் 12 இலக்க காதுகுறி எண் பொருத்தப்பட்டு, அவற்றின் முழு விவரங்களும் டிஜிட்டல் முறையில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகின்றன. இதன் மூலம் செயற்கை முறை கருவூட்டல், காப்பீடு, கன்று ஈன்ற விவரம், உரிமையாளர் பெயர் மாற்றம் மற்றும் கோமாரி, தோல் கழலை, அடைப்பான் போன்ற நோய்களுக்கான தடுப்பூசி பதிவுகள், பால் உற்பத்தி விவரங்கள் அனைத்தும் கால்நடை பராமரிப்புத் துறை இணையதளத்தில் ஆன்லைனில் கொண்டு வரப்படுகிறது. இந்தத் தரவுகளைப் பதிவேற்றம் செய்யும்போது, உரிமையாளரின் கைப்பேசி எண் மற்றும் அடையாள ஆவணங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு, விவசாயிகளின் மொபைலுக்கு வரும் கடவுச்சொல் மூலம் விவரங்கள் உறுதி செய்யப்படுகின்றன. இதன் மூலம் கால்நடைகளை விற்பனை செய்யும்போதோ அல்லது வாங்கும்போதோ அவற்றின் முழு வரலாற்றையும் விவசாயிகள் எளிதாகத் தெரிந்துகொள்ளலாம். எனவே, கிராமங்களுக்கு வரும் கால்நடை பராமரிப்புத் துறை ஊழியர்களுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கி, விபரங்களையும் கடவுச்சொல்லையும் பகிர்ந்து கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொண்டுள்ளார்.



■ சேலம் மாநகராட்சி மாமன்ற கூட்டத்தில் விசிக மாமன்ற உறுப்பினர் இமயவர்மன் குடிநீரை தனியாருக்கு தாரை வார்க்கும் மாநகராட்சி திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தும், இத்திட்டம் ஊழலுக்கு வழிவகுக்கும் தமிழக முதல்வர் தலையிட்டு திட்டத்தை தடுத்து நிறுத்த வலியுறுத்தி உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டார்.



## 97 சதவீத தேர்ச்சியுடன் கலக்கிய கால்டுவெல் நூற்றாண்டு நினைவுப் பள்ளி! தாளாளர் சி. ஜேகர் வழங்கிய பணப்பரிசு

இடையன்குடி மே.28-
இடையன்குடி கால்டுவெல் நூற்றாண்டு நினைவு மேல்நிலைப்பள்ளியில், 202526ஆம் கல்வியாண்டு பத்தாம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் சாதனை படைத்த மாணவிகளுக்குப் பாராட்டு விழா நடைபெற்றது. இப்பள்ளியில் தேர்வு எழுதிய 127 மாணவர்களில் 123 பேர் தேர்ச்சி பெற்று, பள்ளி 97 சதவீத தேர்ச்சியைப் பதிவு செய்து சாதனை படைத்துள்ளது. இத்தேர்வில் மாணவி ஷி. காவியதர்ஷினி 500க்கு 488 மதிப்பெண்கள் பெற்று முதலிடத்தையும், மாணவி யி. ஜெஸ்பா மேபல் 472 மதிப்பெண்கள் பெற்று இரண்டாமிடத்தையும், மாணவி ழி.றி. நவ்யா 466 மதிப்பெண்கள் பெற்று மூன்றாமிடத்தையும் பிடித்து பள்ளிக்குப் பெருமை சேர்த்துள்ளனர். சாதனை படைத்த இந்த முதல் மூன்று மாணவிகளுக்கும் பள்ளியின் சார்பில் பள்ளி தாளாளர் திரு. சி. ஜேகர் அவர்கள் பொன்னாடை அணிவித்து, பணப்பரிசு வழங்கித் தனது பாராட்டுகளைத் தெரிவித்தார். இந்நிகழ்வில் பள்ளி பொறுப்புத் தலைமை ஆசிரியர் கி. ஜாண் சாமுவேல், ஆசிரியர்கள் தாம்சன், அருள் பிரபாகர், ஆசிரியைகள் பிரைஸ்லின் ஜானி, புஷ்பா, ஜெமிமா, மாணவிகளின் பெற்றோர்கள் மற்றும் பள்ளி அலுவலகப் பணியாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டு மாணவிகளை வாழ்த்தினர்.




■ புதுச்சேரி முன்னாள் பாரதப் பிரதமர் பண்டிடத ஜவகர்லால் நேரு நினைவு நாளையொட்டி அரசு சார்பில், அவரது சிலைக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் சிவக்கொழுந்து, ராஜவேலு, ஆறுமும், சாய் சரவணகுமார், ஐயப்பன், மோகன்தாஸ், அழகு, நாராயணசாமி, விக்னேஷ்கண்ணன் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.




## 30 நாட்களுக்குள் கணக்கை ஒப்படைங்க! புதுச்சேரி வேட்பாளர்களுக்குத் தேர்தல் துறை அதிரடி உத்தரவு

புதுச்சேரி மே 28-
புதுச்சேரி மாநிலத்தில் 2026 சட்டமன்றத் தேர்தல் நடைபெற்று முடிந்துள்ள நிலையில், வேட்பாளர்கள் அனைவரும் தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் தங்களது தேர்தல் வரவு செலவு கணக்குகளைத் தாக்கல் செய்ய வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது. இதையொட்டி, வேட்பாளர்களின் தேர்தல் செலவீன கணக்குகளைச் சமர்ப்பிப்பதற்கான அரசுப் பயிற்சி வகுப்பு, மாவட்ட தேர்தல் அதிகாரியும், மாவட்ட ஆட்சியருமான குலோத்துங்கன், இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்றது. இப்பயிற்சி வகுப்பில் வேட்பாளர்களின் தேர்தல் கணக்கு முகவர்கள் பலர் திரளாகக் கலந்து கொண்டனர். கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய மாவட்ட தேர்தல் அதிகாரி, முகவர்களின் கேள்விகளுக்கும், பல்வேறு சந்தேகங்களுக்கும் நேரடியாகப் பதிலளித்தார். மேலும், வேட்பாளர்கள் தங்களது வரவு செலவு கணக்கினை நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் தவறாமல் சமர்ப்பிக்க வேண்டும் என்றும், வேட்பாளர்கள் சமர்ப்பிக்கும் கணக்கு விபரங்களைச் செலவினப் பார்வையாளர்கள் மிகத் துல்லியமாகச் சரிபார்ப்பார்கள் என்றும் அவர் உறுதியாகத் தெரிவித்தார்.



■ எரிசக்தி வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் சி.டி.ஆர்.நிர்மல்குமார் மதுரை அரசு இராசாசி மருத்துவமனையில் பேரையூர் வட்டம், சூலப்புரம் கிராமத்தில் 26.05.2026 அன்று இடிமின்னலுடன் பெய்த மழையில், இடிமின்னல் தாக்கியதில் காயம் அடைந்து மதுரை அரசு இராசாசி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் வாசியம்மாள் (வயது56, க/பெ. பொன்னன்) அவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்து அவருக்கு வழங்கப்பட்டு வரும் சிகிச்சை குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார்.மாவட்ட கண்காணிப்பு அலுவலர் / தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அரசு செயலாளர் கொ. வீரராகவராவ், மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே. பிரவீன்குமார், சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் எம்.வி.கருப்பையா ஆகியோர் உடன் உள்ளனர்



## ஸ்ரீகாமாட்சி அம்மன் சமேத ஸ்ரீ ஏமாம்பரேஸ்வரர் மற்றும் பரிவார தெய்வங்களின் 25ஆம் ஆண்டு வெள்ளி விழா மற்றும் வைகாசி விசாகப்பெருவிழா

சேலம்மே 28-
சேலம் மாநகர், அன்னதானப்பட்டி அகரநகரில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீகாமாட்சி அம்மன் சமேத ஸ்ரீ ஏமாம்பரேஸ்வரர் மற்றும் பரிவார தெய்வங்களின் 25ஆம் ஆண்டு வெள்ளி விழா மற்றும் வைகாசி விசாகப்பெருவிழா செவ்வாய்க்கிழமையன்று மிக விமரிசையாக நடைபெற்றது. இத்திருக்கல்யாண உற்சவத்தைக் கட்டளைதாரர்களான அரிசி மண்டி, அகரம் காலனி அன்னதானப்பட்டி மெயின் ரோடு சீனிவாசன், காந்திமதி, சுரேஷ்குமார், தீபா, அரவிந்த்குமார், சுபிகா சீனிவாசன் ஆகியோர் சிறப்புடன் முன்னின்று நடத்தினார்கள். இவ்விழாவிற்கான சிறப்பான ஏற்பாடுகளை ஆலோசகர் குழுவைச் சேர்ந்த கந்தசாமி, தங்கவேல், உதயகுமார், தங்கவேல் மற்றும் அகரநகர் குடியிருப்பு கார்ப்பரேஷன் நிர்வாகக் குழுவினர் திறம்படச் செய்திருந்தனர். நிர்வாகக் குழுவின் தலைவர் லோகநாதன், செயலாளர் குணசீலன், பொருளாளர் வடிவேல், துணைத் தலைவர் பாலாஜி, துணைச் செயலாளர் பிரபு மற்றும் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் கோவர்த்தனன், சசிகுமார், பிரவீன் (எ) ரமேஷ், தீலீப்குமார், செந்தில்குமார், தனசேகரன், மணிகண்டன், ராஜேஷ், சிவேஷ், கார்த்திக், பாபு, கோகுலகிருஷ்ணன், வினித்குமார், சந்தோஷ் உள்ளிட்ட குழுவினர் அனைவரும் ஒன்றிணைந்து வெள்ளி விழா நிகழ்வுகளை வெற்றிகரமாக நடத்தினர்.



## தேவனூர்புதூரில் உதயசூரியன் முழக்கம்: வாக்காளர்களுக்கு நேரில் நன்றி கூறிய எம்.எல்.ஏ இரா. ஜெயராமகிருஷ்ணன்

மடத்துக்குளம் மே. 28-
திருப்பூர் மாவட்டம் மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதியில் வெற்றி பெற்ற திமுக எம்.எல்.ஏ இரா. ஜெயராமகிருஷ்ணன், உடுமலை மேற்கு ஒன்றியப் பகுதிகள் முழுவதும் தீவிர சுற்றுப்பயணம் செய்து, 'உதயசூரியன்' சின்னத்திற்கு வாக்களித்த பொதுமக்களை நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தார். தேவனூர்புதூர் பேருந்து நிலையம் அருகில் திருப்பூர் புறநகர் மாவட்டக் கழகப் பொறுப்பாளரும் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினருமான கே. ஈஸ்வரசாமி தலைமையில், மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் செழியன் முன்னிலையில் நன்றி அறிவிப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்வில் மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் வாசு, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த் மற்றும் கழக, சார்பணி, கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டு, எம்.எல்.ஏவுடன் இணைந்து உடுமலை மேற்கு ஒன்றியம் முழுவதும் பொதுமக்களை நேரில் சந்தித்துத் தங்களது நன்றியினைப் பகிர்ந்துகொண்டனர்.



■ சேலம் சீலநாயக்கன்பட்டி ஸ்ரீ முருகானந்த சாது சபை மடாலயத்தின் ஸ்ரீதட்சிணாமூர்த்தி திருமூர்த்தி இறைபணி மன்ற கமிட்டியின் 32ம் ஆண்டு குரு பெயர்ச்சி மற்றும் சிறப்பு மகா யாக பூஜை, சிறப்பு அபிஷேகம் மற்றும் ஸ்ரீகுருபகவானுக்கு தங்க கவசம் அணிவித்து, சிறப்பு அலங்காரத்துடன் கூடியதீபாராதனை நடைபெற்றது. அனைத்து பக்தர்களுக்கும் பிரசாதப்பை வழங்கப்பட்டது.



■ மதுரை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் / தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அரசு செயலாளர் கொ. வீரராகவராவ், மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே. பிரவீன்குமார் மாநகராட்சி,கே.கே. நகர் பகுதியில் உள்ள நியாய விலைக் கடையில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் உணவுப் பொருட்களின் தரம் மற்றும் இருப்பு குறித்து ஆய்வு செய்து பார்வையிட்டார்.

## மாணவர்கள் பள்ளிக்கு பைக் ஓட்டி வந்தால் பறிமுதல்

### பள்ளிக் கல்வித் துறை உத்தரவு

சென்னை:மே,28-

பள்ளிக் கல்வி இயக்குநர் எஸ்.கண்ணப்பன், அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்பி உள்ள சுற்றறிக்கை: பள்ளி மாணவர்கள் மோட்டார் வாகனங்கள் பயன்படுத்துவது குறித்து தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு போக்குவரத்து மற்றும் சாலைப் பாதுகாப்பு ஆணையரகம் கடிதம் மூலம் வலியுறுத்தியுள்ளது.அதனடிப்படையில், பின்வரும் அறிவுரைகளை தலைமை ஆசிரியர்கள், அனைத்து மாணவர்களுக்கும் வழங்க முதன்மை கல்வி அலுவலர்கள் அறிவுறுத்த வேண்டும். அதன்படி, சாலை பாதுகாப்பு மன்றம் அனைத்து பள்ளிகளிலும் ஏற்படுத்த வேண்டும். இந்த மன்றத்துக்கு உடற்கல்வி ஆசிரியர்கள் தலைவராக இருந்து செயல்பட வேண்டும்.காலை வழிபாட்டு கூடுகையில், ஒவ்வொரு நாளும் சாலை பாதுகாப்பு குறித்த ஒரு கருத்தை பகிர வேண்டும். என்சிசி, என்எஸ்எஸ், சாரணர் இயக்கம், இளஞ்செஞ்சிலுவை சங்க மாணவர்களுக்கு போக்குவரத்துக் காவல்துறை மூலம், சாலை விதிகள் குறித்த பயிற்சியும், போக்குவரத்தை சீர் செய்தலில் அவ்வப்போது ஈடுபடுத்தவும் செய்யலாம்.தலைக்கவசம் அணிவதை வலியுறுத்தி, பேரணிகள், விழிப்புணர்வு நாடகங்களையும் நடத்த வேண்டும். மாணவர்கள் பள்ளிக்கு இரு சக்கர வாகனங்களில் வந்தால், வாகனத்தைப் பறிமுதல் செய்து பெற்றோரை அழைத்து தக்க அறிவுரை வழங்கி பெற்றோரிடம் ஒப்படைக்க வேண்டும்.

பள்ளிக்கு வெளியில் மாணவர்கள் இரு சக்கர வாகனங்களை ஓட்டி செல்வதை தடுக்க தேவையான அறிவுரைகளை காலை வணக்க கூட்டத்தில் வழங்குதல் வேண்டும்.




SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000